Cr. Misc. 19

# DEPOSITION OF WITNESSES

(Chapter XXIII Code of Civil Procedure)

IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, DHARMAPURI

Calendar Miscellaneous
Preliminary Registered Case No. **S.C. No.1 of 2025**
Sessions

Deposition of Witness for : **PW2(LW3)**

Name : திரு.விஜய்

Father's Name : வெள்ளியங்கிரி

Village : கள்ளிபுரம்

Taluk : பென்னாகரம்

Calling : Computer Operator

Age : 32

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **11.09.2025.**

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**முதல் விசாரணை:**

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். எனது பெரியம்மா பெருமாளி மகன் அசோக்குமார். அவர் பென்னாகரம் சமுத்துவபுரத்தில் வசித்து வந்தார். அசோக்குமாருக்கு சுகன்யா என்ற பெண்ணுடன் திருமணம் சுமார் 14 வருடங்களுக்கு முன்பு நடந்தது. எங்களுடைய குடியிருப்பும் அவருடைய வீடும் ஒரே தெருவில் உள்ளது. அசோக்குமார் சென்டிரிங் வேலை செய்வதற்காக வெளியூர் சென்றுவிடுவார். இந்த சமயத்தில் என்னுடைய அண்ணன் மனைவி சுகன்யாவிற்கும் அவர்களுடைய எதிர் வீட்டை சார்ந்த சத்தியமூர்த்திக்கும் கள்ள

தொடர்பு ஏற்பட்டது. சத்தியமூர்த்தியை எனக்கு நன்கு தெரியும். ஆஜர் எதிரி தான் மேற்படி சத்தியமூர்த்தி. எதிரிக்கும் என் அண்ணன் குடும்பத்திற்கும் இதை பொறுத்து தகராறு ஏற்பட்டது. இதை பொறுத்து எதிரியின் தந்தை முனுசாமிக்கும் சத்தியமூர்த்திக்கும் சண்டை ஏற்பட்டு அதில் சத்தியமூர்த்தி முனுசாமியால் தாக்கப்பட்டு ஒரு வழக்கும் ஏற்பட்டது. இப்படி இருக்கையில் என் அண்ணன் பெங்களூர் சென்டிரிங் வேலைக்கு சென்றுவிட்டார். 31.10.2024ம் தேதி சுகன்யா அவருடைய அம்மா வீட்டிற்கு குழந்தைகளை அழைத்து கொண்டு சென்றுவிட்டார். என் அண்ணன் அசோக்குமார் பெங்களூரில் இருந்து நேரடியாக அவர் மாமியார் வீடான பிக்கனஅள்ளிக்கு சென்றுவிட்டார். அடுத்த நாள் 01.11.2024ம் தேதி அன்று பிக்கன அள்ளியில் நடைபெற்ற கலை நிகழ்ச்சியில் என் அண்ணன் இருந்தபோது பென்னாகரத்தில் இருந்து ஆஜர் எதிரியும் அவர் நண்பர் ஹரிஷ்குமாரும் பிக்கனஅள்ளிக்கு சென்றுள்ளனர். அப்போது மேற்படி எதிரி சத்தியமூர்த்தி இறந்து போன என் அண்ணன் அசோக்குமாருக்கு கைப்பேசியில் தொடர்பு கொண்டு அழைத்து அவருடன் சண்டையிட்டு ஏதோ ஒரு கூர்மையான ஆயுதத்தால் என் அண்ணன் கழுத்திலும் வயிற்றிலும் குத்தி உள்ளார். இந்த சங்கதியை ஆஜர் எதிரி ஹரிஷ்குமாருக்கு சொல்லி உள்ளார். மேற்படி ஹரிஷ்குமார் சம்பவங்களை குறித்து என்னிடம் கைப்பேசியில் தொடர்பு கொண்டு கூறினார். இதை பொறுத்து நான் பென்னாகரத்தில் இருந்த என் பெரியம்மாவிற்கு கைப்பேசி மூலம் தகவல் தெரிவித்தேன். பின்னிட்டு இறந்து போன அசோக்குமாரின் உடல்

தருமபுரி அரசு மருத்துவமனைக்கு வந்துவிட்டதால் அரசு மருத்துவமனையில் அசோக்குமாரின் உடலை பார்த்துவிட்டு மகேந்திரமங்கலம் காவல் நிலையம் சென்று புகாரை நான் எழுதி என் பெரியம்மா பெருமாளி புகாரை காவல் நிலையத்தில் கொடுத்தார். அதன் பேரில் மகேந்திரமங்கலம் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு காவல் நிலையத்தில் இருந்து ஆய்வாளர் தருமபுரி அரசு மருத்துவமனைக்கு வந்து பிரேத விசாரணை செய்து உடலை பிரேத பரிசோதனை செய்து எங்களிடம் பிரேதத்தை ஒப்படைத்தார்கள். பிரேத விசாரணை செய்தபோது நான் உடன் இருந்தேன். இது குறித்து காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)</u>**

வழக்கு சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். ஹரிஷ்குமார் எனக்கு போன் செய்திருந்தால் அவர் தொலைபேசி எண், எந்த நேரத்தில் என்னை அழைத்தார் என்ற விவரத்தை போலிசார் விசாரணையில் சொல்லி இருப்பேன் என்றால் தவறு. காவல் நிலையத்தில் புகார் கொடுத்தபோது என் அண்ணி சுகன்யா காவல் நிலையத்தில் விசாரணைக்காக இருந்தார். என் அண்ணன் இறப்பிற்கு என் அண்ணி பொறுப்பாவார் என்று புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். ஹரிஷ்குமார் எனக்கு போன் செய்தார் என்றும் எதிரி தான் என் அண்ணனை குத்திவிட்டார் என்று சொல்வதும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எந்த விவரமும் எனக்கு நேரடியாக தெரியாது என்று சொன்னால் சரிதான்.

<u>மறு விசாரணை</u>– இல்லை

Taken down by me in the presence of Accused. Readover to the witness and admitted by the witness as true and correct and signed in my presence on 11.09.2025.

THIRUMAGAL C Digitally signed by THIRUMAGAL C
Date: 2025.09.11 16:55:56 +0530

Principal Sessions Judge,
Dharmapuri.

Cr. Misc. 19

# DEPOSITION OF WITNESSES

(Chapter XXIII Code of Civil Procedure)

IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, DHARMAPURI

Calendar Miscellaneous
Preliminary Registered
Sessions

Case No. **S.C. No.1 of 2025**

| | |
|---|---|
| Deposition of Witness for | : **PW3(LW4)** |
| Name | : திரு.கணேசன் |
| Father's Name | : ராமன் |
| Village | : கள்ளிபுரம் |
| Taluk | : பென்னாகரம் |
| Calling | : கூலி தொழில் |
| Age | : 54 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **11.09.2025.**

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**முதல் விசாரணை:**

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். என் அக்கா பெருமாளி மகன் அசோக்குமார் (எ) வேலு கொலை செய்யப்பட்டார். அவர் மனைவி பெயர் சுகன்யா. அவர்கள் பிக்கனஅள்ளியை சார்ந்தவர்கள். அவர்களுக்கு திருமணமாகி சுமார் 14 வருடங்கள் ஆகிறது. அவர்கள் பென்னாகரம் சமுத்துவபுரத்தில் குடியிருந்தார்கள். அப்போது என் அக்கா மருமகள் சுகன்யாவிற்கும் எதிர் வீட்டை சார்ந்த எதிரி சத்தியமூர்த்திக்கும் கள்ள தொடர்பு ஏற்பட்டதை குறித்து என் அக்கா என்னிடம் கூறினார். அப்படி என்றால் இது குறித்து நீங்கள் காவல்

நிலையத்தில் புகார் செய்யுங்கள் என்று கூறினேன். இதை பொறுத்து விஜய், நான், என் அக்கா அனைவரும் சென்று சத்தியமூர்த்தியின் தந்தை முனுசாமியிடம் முறையிட்டோம். இதை பொறுத்து முனுசாமி ஆஜர் எதிரியை கண்டித்தபோது ஆஜர் எதிரி அவர் தந்தை முனுசாமியை அடித்து கையை உடைத்துவிட்டார். அடுத்த நாள் என் அக்கா மகன் அசோக்குமார் ஆஜர் எதிரியை கண்டித்து கேட்டபோது என்றிருந்தாலும் உன்னை கொலை செய்துவிட்டு உன் மனைவியை நான் அடைவேன் என்று சவால் விட்டுள்ளான். பின்னிட்டு என் அக்கா மகன் வேலை விசயமாக பெங்களூர் சென்றுவிட்டார். 31.10.2024ம் தேதி அன்று சுகன்யா அவருடைய அம்மா வீடான பிக்கனஅள்ளிக்கு சென்றுவிட்டார். அன்று மாலை என் அக்கா மகன் அசோக்குமார் நேரடியாக பிக்கனஅள்ளி வந்துவிட்டார். அந்த சமயத்தில் ஆஜர் எதிரியும் அவர் நண்பர் ஹரிஷ்குமாரும் இரு சக்கர வாகனத்தில் பிக்கனஅள்ளி சென்றுள்ளார்கள். பாதி வழியில் ஹரிஷ்குமாரை இறக்கி விட்டுவிட்டு எதிரி அசோக்குமாரை கைப்பேசியில் தொடர்பு கொண்டுள்ளார். அதன் பேரில் அசோக்குமாருக்கும் எதிரிக்கும் பிக்கனஅள்ளியில் வாக்குவாதம் ஏற்பட்டு ஏதோ ஒரு கூர்மையான ஆயுதத்தால் அசோக்குமாரை ஆஜர் எதிரி கழுத்திலும் வயிற்றிலும் குத்தி உள்ளார். அதனால் அசோக்குமார் அங்கேயே மயக்கம் போட்டு விழுந்துவிட்டதாக அன்று இரவு 10.00 மணிக்கு விஜய் எனக்கு தொலைப்பேசியில் தகவல் சொன்னார். அதன் பேரில் நான், என் அக்கா மற்றும் உறவினர்கள் தருமபுரி அரசு மருத்துவமனைக்கு அன்று இரவு சுமார் 12.00

மணிக்கு சென்றபோது இப்போது உடலை பார்க்க முடியாது, காலையில் வாருங்கள் என்று சொன்னதன் பேரில் காலை மருத்துவமனைக்கு சென்று உடலை பார்த்துவிட்டு புகார் கொடுப்பதற்காக காலை 08.00 மணிக்கு மகேந்திர மங்கலம் காவல் நிலையம் சென்று என் அக்கா பெருமாளி புகார் கொடுத்தார். நானும் உடன் இருந்தேன். பின்னிட்டு போலீசார் அரசு மருத்துவமனைக்கு வந்து பிரேத விசாரணை செய்து உடலை பிரேத பரிசோதனை செய்து உடலை எங்களிடம் ஒப்படைத்தார்கள். நான் பிரேத விசாரணை அறிக்கையில் சாட்சியாக இருந்தேன். இதை குறித்து போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)</u>**

நான், என் அக்கா, அசோக்குமார் ஆகியோர் எதிரியின் தந்தையிடம் சண்டை போட்ட தேதி எனக்கு ஞாபகமில்லை. உண்மையில் நாங்கள் எதிரியின் தந்தையிடம் சென்று முறையிட்டிருந்தால் தேதி, மாதம், நேரம் ஆகியன சொல்லி இருப்போம் என்றும் வழக்கிற்காக மற்றவர் கூறிய விவரங்கள் வைத்து நான் கூறுகிறேன் என்றால் சரியல்ல. அசோக்குமார் எதிரியிடம் சண்டை போடும்போது நான் இருந்தேன். என்ன தேதியில், எந்த இடத்தில் சண்டை நடந்தது என்ற விவரத்தை நான் போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் தவறு. அசோக்குமார் பிக்கனஅள்ளிக்கு சென்ற விவரம் என் அக்கா சொல்லித்தான் எனக்கு தெரியும். சத்தியமூர்த்தி ஹரிஷ்குமாருடன் சென்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான், விஜய் சொல்லித்தான் எனக்கு தெரியும். இரவு 12.00 மணிக்கு நானும் உறவினர்களும் தருமபுரி அரசு மருத்துவமனைக்கு

சென்று பார்த்தோம் என்ற விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. இரவு 10.30 மணிக்கு விஜய் எந்த தொலைபேசி எண்ணில் இருந்து எனக்கு அழைத்து தகவல் சொன்னார் என்ற விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் தவறு. அசோக்குமாரின் மனைவிக்கும் எதிரிக்கும் கள்ள தொடர்பு இருந்தது என்பதை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. மற்றவர்கள் கூறிய விவரங்கள் வைத்து நான் சாட்சியம் கூறுகிறேன் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u>– இல்லை

Taken down by me in the presence of Accused. Readover to the witness and admitted by the witness as true and correct and signed in my presence on 11.09.2025.

THIRUMAGAL C Digitally signed by THIRUMAGAL C Date: 2025.09.11 16:56:05 +0530

Principal Sessions Judge,
Dharmapuri.